DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 414/2025

Miscellaneous :

Sessions : PW 4

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ஆறுமுகம் |
| Father / Husband Name | துரைசாமி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 12.05.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கூடப்பாக்கத்தில் வசித்து ஆடு மேய்க்கும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். தேதி மாதம் ஞாபகமில்லை, சுமார் 2 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு 7 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரி அவரது மகளின் தலை முடியை பிடித்து அடிக்க சென்றார், நான் ஏன் அடிக்கிறாய் என்று கேட்டதற்கு தடியால் என்னுடைய காதில் அடித்துவிட்டார். பின்னர் அவர்களின் 3 ஆடுகளையும் அடித்து கொன்றுவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. போலிசார் விசாரித்தபோதும் முதல் விசாரணையில் சொன்னதுபோல் தான் சொன்னேன். எதிரி அவரது மகளை அடித்ததாக என் பக்கத்து வீட்டுக்காரரான அமுதா என்பவர் கேட்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி 3 ஆடுகளை அடித்துக்கொன்றுவிட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆடுகளை மருத்துவமனைக்கு தூக்கிச்சென்றார்களா என்றால் இல்லை. வீட்டிற்கு வந்து தான் மருத்துவம் பார்த்தார்கள். மாலை 6 மணிக்கு வந்து பார்த்தார்கள். ஆடுகளை புதைக்க சொன்னார்கள், புதைத்துவிட்டு போட்டோ எடுக்க சொன்னார்கள், போட்டோ எடுத்து அனுப்பிவிட்டார்கள்.